# திருக்குறளில் தலைமைப் பண்புகள்

**முனைவர் சு.செந்தாமரை**
உதவிப் பேராசிரியர்
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம்
திருவாரூர்

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** 1

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

தலைமைப் பண்புகள் பற்றி வள்ளுவர், திருக்குறளில் அதிகமான இடங்களில் சுட்டிச் சென்றுள்ளார். அவை:

1. தலைவனுக்குரிய மாட்சிமை, 2. அவையஞ்சாமை, 3. அறிவைப்பெருக்குதல், 4. புரிந்துகொள்ளும் தன்மை, 5. தன்னடக்கம், 6. சினம் தவிர்த்தல், 7. சொல்வன்மையால் உண்டாகும் நன்மைகள், 8. உடல்மொழி, 9. அவையறிதல், 10. தோல்வியைச் சந்திக்கும் திறமை, 11. சோம்பலை அகற்றுதல்.

ஒரு குடும்பமானாலும், ஒரு குழுவாகச் செயல்பட்டாலும் அங்கு ஒரு தலைமை என்பது அத்தியாவசியமாக உள்ளது. ஒரு சரியான தலைமையின் கீழ் நடக்கும் குடும்பமோ, குழுவோ அவற்றில் சிறுசிறு குறைகள் இருந்தாலும், இறுதியில் வெற்றி பெறும். தலைமைகொள்ள ஒருவருக்குச் சில தனிப்பட்ட குணங்கள் தேவை. சொல்லாற்றல், பிறரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருத்தல் போன்ற சில குணங்கள் மிகமிக முக்கியம்.

ஒரு தலைவன் தன் குடும்த்திலோ, குழுவிலோ தான் நினைத்த குறிக்கோளை அடைவதற்கு உடனிருப்பவர் எல்லோரும் ஒத்துழைப்பதற்கான வழிகளை ஏற்படுத்திவைப்பதே தலைமைக்குச் சிறந்ததாகும். மேலைநாட்டு அறிஞர்கள் தலைமைப் பண்புகள் பற்றி பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். ‘மேலாண்மை, நிர்வாகம், தலைமை’ போன்ற சொற்கள் பல்வேறு நாடுகளிலும் பல வடிவங்களில் வளர்ச்சியடைந்து வந்துள்ளன. பீட்டர் எ.ஃ.ப் ட்ரக்கர் என்பவர் “நிருவாக இயலின் குரு” என்றே வருணிக்கப்படுகின்றார். இவர் எழுதிய ‘எசென்சியல் ட்ரக்கர்’ என்ற நூல் இதுபற்றி விரிவாக ஆராய்கிறது. ஜான் மாக்ஸ்வெல் எழுதியுள்ள ‘ஒரு தலைவனுக்கு இருக்க வேண்டிய இன்றியமையாத-21- பண்புகள்’ என்ற நூலும் இதுபோன்ற விளக்கங்களைக் குறிப்பிடுகிறது.

‘உதயமாகிறது வலிமை படைத்த பாரதம்’ என்ற ஆ.ப.ஜெ. அப்துல் கலாம், ஆ.சிவதாணுப் பிள்ளை ஆகிய இருவரும் இணைந்து எழுதிய நூலில் ஆக்க சக்தியும் தார்மீகத் தலைமையும் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு, ‘பல்வேறு

பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள் மற்றும் ஆசிரிய சமுதாயத்தினரிடம் கலந்துரையாடியபோது, கல்வியில் தார்மீகத் தலைமை உருவாக்குவது பற்றிய ஒரு கேள்வி அவர்களிடம் கேட்கப்பட்டது. இந்தக் கேள்வியை ஊடகம் மூலம் தெரிந்துகொண்ட டெக்ஸஸ் ஏ ஒ எம் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியரான ராபர்ட் ஸ்லேட்டர் மின்னஞ்சலில் இதற்குப் பதிலளித்திருந்தார். கல்வி மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை நிபுணரான இவரை ஒரு சமயம் நேரில் சந்தித்தபோது, தேசிய நிர்மானப்பணிக்காக மாணவர்களிடம் வளர்க்கவேண்டிய திறன்கள், திறமைகள் பற்றிய தனது கருத்தையும் விளக்கமாகச் சொன்னார். அவர் சொன்ன கருத்துக்கள், “நாம் நம்மை எப்படிப்பட்ட மனிதர்களாக உருவாக்கிக் கொள்ள விரும்புகிறோம்? நமது மாணவர்களுக்கு எந்த மாதிரியான திறன்களை நாம் வழங்க விரும்புகிறோம்? ஒரே சமயத்தில் வளர்ச்சி அடைவதற்கான இலட்சியத் திட்டங்கள் நம்மிடம் உள்ளன. இந்த லட்சியங்களை நிறைவேற்றுவதற்காகக் கல்வி நிலையங்களில் பின்வரும் திறன்கள் தேவைப்படுகின்றன.

1. ஆராய்ச்சி மற்றும் தோண்டித் துருவி அறிதல்
2. ஆக்கத்திறனும் புதுமைப்படைப்பும்
3. நவீனத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் திறன்
4. தொழில் முனைவுத் தலைமைத் தகுதித்திறன்
5. தார்மீகத் தலைமை - நேர்மையான தலைமைக்கானத் திறன்

இந்த ஐந்து பண்புகளையும்கொண்ட சரியான மாணவர்களை உருவாக்குவதுதான் ஆசிரியரின் இலட்சியமாக இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார். மேலும் ‘ஒரு தலைவர் என்பவர் கட்டளையிடும் தளபதியாக இருக்கக் கூடாது. தொலைநோக்குக் கொண்டவராக, துணை நிற்கும் ஒருவராக, சிந்தனையாளராக அவர் திகழ வேண்டும். எல்லாவற்றையும்விட, உயர்ந்த, உன்னதமான மனம் படைத்திருப்பது தான் தலைவரின் தனி முத்திரை. இப்படிப் பட்ட தலைமையை உருவாக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

உலகிலுள்ள அனைத்து மனிதர்களுக்கும் வழிகாட்டும் பெருமையுடைய திருக்குறளில் தலைமைத்துவம் எவ்வாறு சுட்டப்பட்டுள்ளது என்பதைக் காணலாம்.

**1. தலைவனுக்குரிய மாட்சிமை:** ஒரு தலைவனுக்கான உயர்ந்த பண்புகளில் ஒன்று அவனை அனைவரும் நெருங்கும்வண்ணம் காட்சிக்கு எளியனாகவும், கடுமையான சொற்களைப் பேசாதவனாகவும் இருத்தல். அவ்வாறு இருந்தால் அவன் புகழ் எல்லோராலும் போற்றப்படும் என்று வள்ளுவர் கூறியுள்ளார். அறத்துப்பால் இறைமாட்சியில்,

**“காட்சிக் கெளியன் கடுஞ்சொல் அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம்” - (386)**

என்ற குறள் மூலம் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் தன்னைச் சுற்றியுள்ளோரிடம் ஒரு தலைவனுக்கு இருக்கவேண்டிய நேர்மை, நீதி போன்ற பண்புகளைப் பற்றி எடுத்துக்கூறும் குறளாக இறைமாட்சியில்,

**“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப் படும்” - (388)**

என்ற குறள் மூலம் விளக்குகிறார். இத்தகைய குணங்கள் தலைமை மீது நல்ல நட்பும், நம்பிக்கையும், பணிவும் ஏற்படுத்தும் என்கிறார்.

**“செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்**
**கவிகைக்கீழ் தங்கும் உலகு” - (389)**

என்ற குறளில், பண்புடைய வேந்தன் தனக்கு விருப்பமில்லாத சொற்களையும் பொறுமையுடன் செவிமடுத்துக் கேட்போனாக இருந்தால் அவன் தலைமைக்குக்கீழ் உலகமே தங்கும் என்று குறிப்பிடுகின்றார். சொற்திறம் மிக்க ஒரு தலைவனைச் சுட்டிக்காட்டும்போது,

**“சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை**
**இகல்வெல்லல் யார்க்கும் அரிது”**

என்று சொல்வன்மை அதிகாரத்தில் ஒரு தலைவன், தான் எண்ணியவற்றை நன்கு சொல்ல வல்லவன், சோர்வு இல்லாதவன், அஞ்சாதவனாகவும் உள்ளவனை யாராலும் சுலபமாக வெல்ல முடியாது என்று குறிப்பிடுகின்றார். இனிய சொல்லுடன் தக்கவர்க்கு வேண்டிய பொருளைக் கொடுத்து, அன்புடன் வழிநடத்திச் செல்லும் தலைவனின் பெருமை உலகம் முழுவதும் பரவியிருக்கும். நினைத்ததையெல்லாம் அவனால் அடைய முடியும் என்பதற்கு,

**"இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்**
**தான்கண் டனைத்துஇவ் வுலகு" - (387)**

என்ற குறள் மூலம் விளக்குகிறார். தலைமைகொள்ளத் தேவையான இன்றியமையாப் பண்புகளென வள்ளுவர்,

**"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தர்க் கியல்பு" - (382)**

என்று இறைமாட்சி அதிகாரத்தில் உள்ள இக்குறள் மூலம் எடுத்துக் காட்டுகின்றார். தலைமைப் பொறுப்பில் இருப்பவர்க்கு இடையூறுகளும், போட்டிகளும் எப்போதும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தாக்கும். இதனைச் சமாளிக்க புத்திசாலித்தனம், விவேகம், துணிவு இவை முக்கியம். இக்கருத்தை வலியுறுத்த வந்த வள்ளுவர்,

**"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்**
**நீங்கா நிலனாள் பவர்க்கு" - (383)**

**2. அவையஞ்சாமை:** கற்றவர் மத்தியில் தாம் கற்றவற்றை அவர் மனதில் பதியும்படிச் சொல்லும் வல்லமை உடையவர், கற்றவர் எல்லோரையும்விடக் கற்றவராக மதித்துச் சொல்லப்படுவார். இதனை,

**"கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்**
**கற்றசெலச் சொல்லு வார்" - (722)**

என்று குறிப்பிட்டுள்ளார். பகைவர் உள்ள போர்க்களத்திற்குக்கூட அஞ்சாமல் செல்லத் துணிந்தவர்கள் பலர் ஆனால் கற்றோரின் அவைக்களத்தில் அஞ்சாமல் பேச வல்லவர் வெகுச்சிலரே. இவர்களே தலைமைக்குத் தகுதியானவர் என்பதை,

**"பகையகத்துச் சாவார் எளியர் அரியர்**
**அவையகத்து அஞ்சா தவர்" - (723)**

என்ற குறள் மூலம் விளக்குகின்றார்.

**"ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா**
**மாற்றம் கொடுத்தற் பொருட்டு" - (725)**

என்ற குறளில், வேற்று சபையில் கேட்ட கேள்விகளுக்கு அஞ்சாது மறுமொழி சொல்வதற்குத் தருக்க நூற்பொருள் தெரிந்து கற்று நுட்பமாக விளக்குபவன் தலைமைப் பண்பு மிக்கவனாக விளங்குவான் என்கிறார். பொதுவாகத் தன்னம்பிக்கை இல்லாத ஒரு தலைவனிடம் நாவன்மை அமையாது. அதனால் பேசும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தன்னம்பிக்கையோடு பேசுவானேயானால் தைரியமும் தன்னம்பிக்கையும் பெருகும்.

**3. அறிவைப் பெருக்குதல்:** தலைமைப் பண்புகளுள்ளவன் தன்னை வளர்த்துக்கொள்ள அறிவாளிகளிடமிருந்து அதிகம் கற்றுக்கொள்கிறான். அவன் கற்கத்தகுந்த நூல்களைக் கற்று அதற்கேற்றாற்போல் நல்ல நெறியில் செல்வான். வள்ளுவர் கல்வி அதிகாரத்தில்,

**"கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக" - (391)**

என்ற குறள் மூலம் இக்கருத்தை வலியுறுத்துகிறார். அறிவை மேன்மேலும் வளர்த்துக்கொள்ள நல்ல நூல்களை அதிகமாகக் கற்கவேண்டும். இக்கருத்தை, மணற்கேணி எவ்வாறு தோண்டத்தோண்ட நீர் அதிகமாக ஊறுகிறதோ, அதுபோல் கற்ககற்க ஆழமான அறிவு பெருகும் என்கிறார். அவ்வாறு நூல்களைக் கற்க முடியாமல் போகும்போது, கற்றறிந்த புலவர்களிடம் கேட்டு அறிந்துகொண்டால், துன்பம் வந்த காலத்தில் உதவியாக இருக்கும்.

அதற்குக் கேள்வி அதிகாரத்தில்,

**"கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்கு**
**ஒற்கத்தின் ஊற்றாந் துணை" - (414)**

என்ற குறள் மூலம் வள்ளுவர் வழிகாட்டுகிறர்

**"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**
**ஆன்ற பெருமை தரும்" - (416)**

என்ற குறளிலும் அறிவு மிக்கோரிடம் ஒரு தலைவன் சிறிய அளவே கேட்க நேர்ந்தாலும், அக்கேள்வி சமயத்தில் நிறைந்த பெருமை சேர்க்கக்கூடியதாக அமையும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**4. புரிந்துகொள்ளும் தன்மை:** ஒரு தலைவனுக்கு ஒரு பொருளைப் பற்றிய தகவல் மட்டும் போதாது. அதில் இருக்கும் உண்மை, நம்பகத்தன்மை, தெளிவு, நுணுக்கம் போன்றவற்றை அறிந்துகொள்வதே ஆழ்ந்த அறிவை வெளிப்படுத்தும் என்ற கருத்தை விளக்க அறிவுடைமை அதிகாரத்தில்,

**"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு" - (423)**

என்று வள்ளுவர் அறிவுறுத்துகிறார். அதுபோல்

**"எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்**
**நுண்பொருள் காண்பது அறிவு" -(424)**

என்ற குறளில், தான் சொல்லும் கருத்துப் பிறருக்குப் புரியும்படி எடுத்துக் கூறுவதும், மற்றவர்கள் கூறுவதிலிருந்து நுண்ணிய கருத்துக்களை எடுத்துக்கொள்வதும் தான் ஒரு தலைவனுக்கு அறிவாகும் என்று குறிப்பிட்டுள்ளார். ஒரு தலைவன் தனக்கு வரும் துன்பத்தை முன்பே அறிந்து காத்துக்கொண்டால், அவன் அஞ்சும்படி வரும் துன்பம் எதுவும் இருக்காது என்ற கருத்தை,

**"எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை**
**அதிர வருவதோர் நோய்" – (429)**

என்ற குறளில் சுட்டிக்காட்டியுள்ளார்.

**5. தன்னடக்கம்:** ஒரு தலைவனுக்குத் தன்னடக்கம் என்பது மிக முக்கியம் அவ்அடக்கத்தை உறுதிப் பொருளாகக்கொள்ள வேண்டும் என்பதை வள்ளுவர் அடக்கமுடைமை அதிகாரத்தில்,

**"காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**
**அதனினூங்கு இல்லை உயிர்க்கு" - (122)**

என்ற குறளின்மூலம் தெளிவுபடுத்துகிறார். தலைவனாக விரும்புபவன் தன் நாவை அடக்கவில்லையென்றால் சொற்குற்றத்திற்கு ஆளாக நேரிடும் என்பதை,

**"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" (127)**

என்று எச்சரிக்கிறார்.

**"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு" - (129)**

என்ற குறளின் மூலம் நாவடக்கம் பற்றிக் கூறியுள்ளார்.

**6. சினம் தவிர்த்தல் :** ஒரு தலைவனுக்கு அவன் சினம் எங்கு பலிக்குமோ,அங்கே அச்சினம் வராமல் காப்பாற்றுபவனே சினம் காப்பவன் ஆவான். சினம் பலிக்காத இடத்தில் அச்சினத்தைக் காத்தாலும், காக்காவிட்டாலும் பலனில்லை என்பதை எடுத்துச் சொல்ல,

**"செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்**
**காக்கினென் காவாக்காகா லென்" - (301)**

என்ற வெகுளாமை அதிகாரத்தில் வரும் குறள் மூலம் சுட்டிச்செல்கிறார். சினம் தான் ஒரு

மனிதனுக்கு முதல் எதிரி. சினம் முன்னேற்றப்பாதையைத் திசைதிருப்பி விடும். சினம் ஒருவனுக்குக் காரணகாரியங்களை ஆராய்ந்து விவேகத்துடன் முடிவெடுக்கும் தன்மையைக் கெடுத்துவிடும். அதனால் சினத்தைச் சிறிதளவுகூட உள்ளத்தில் நினைக்காது இருக்க வேண்டும். அவ்வாறு இருக்கும்போது அவனுக்கு எல்லா நன்மைகளும் கிடைக்கும் என்ற கருத்தை விளக்க,

**"உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்**
**உள்ளான் வெகுளி எனின்" - (309)**

என்று விளக்குகிறார். வேதாத்திரியம்கூட சினத்தை எவ்வாறு அடக்குவது என்பதைச் சுயபரிசோதனைமூலம் கற்றுக்கொடுக்கிறது.

**7. சொல்வன்மையால் உண்டாகும் பலன்கள்:** தலைமை தாங்க நினைக்கும் ஒருவன் தான் பேச முற்படும்போது, எதைச்சொல்வது என்பதைவிட, எப்படிச் சொல்வது என்பதுதான் அவசியம். பேச வேண்டிய கருத்துக்களை மனதில் இருத்தி, எதிரில் இருப்பவர்களை ஒரு செயலைச் செய்து முடிக்கக்கூடிய வகையில் தன் பேச்சை அமைத்துக்கொள்ள வேண்டும். செயல்திறனோடு பேச்சுத்திறனும் இருக்கும் ஒருவனுக்கு பதவிகள் தேடி வருகின்றன. ஒரு தலைவனது குணத்தையும், முன்னேற்றத்தையும் அவன் பேச்சு தெளிவாக எடுத்துக்காட்டுவது போன்று, அவனுக்கும் அவன் குழுவிற்கும் அது பாலமாக இருக்கிறது. பேசும் சொற்களின் பொருள் கேட்போரைச் சென்று அடைகிறதா? என்பதை உணர்ந்து பேச வேண்டும். தமிழகத்தில் திராவிடக் கட்சிகளின் முன்னேற்றத்திற்குப் பேச்சுதான் முதன்மையாக வைக்கப்பட்டது. விவேகானந்தரின் பேச்சுத்திறமை அனைவரும் அறிந்ததே. மேலை நாட்டில் வின்ஸ்டன் சர்ச்சில் தன் சொல்திறம் மூலம் கோடிக்கணக்கான மக்களின் மனங்களை ஆட்கொண்டது மட்டுமல்லாமல், இரண்டாம் உலகப்போரில் வெற்றி பெறத் தேவையான தியாகத்தையும் செய்யவைத்தார். கிரேக்க நாட்டில் ஆண்டனியின் பேச்சு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. வள்ளுவரும் திருக்குறளில் சொல்வன்மையைத் தனி அதிகாரமாக வைத்து, தேவையற்ற பேச்சைத் தவிர்த்தல், எதிரில் இருப்போரைப் பற்றி உணர்தல், அவர்களின் அங்க அசைவுகளைக் கூர்ந்து கவனித்துப் புரிந்துகொண்டு தன் பேச்சை அதற்குத் தக்கவாறு அமைத்துக்கொள்ளல் போன்றவற்றைச் சொல்வன்மையில் பிரதிபலிக்கச் செய்கிறார்.

**"நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்**
**யாநலத்து உள்ளதூம் அன்று" (641)**

நாநலம் என்பது சொல்வன்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது. அது மற்ற நலன்களுக்கெல்லாம் அப்பாற்பட்டது என்கிறார். செல்வமும் கேடும் சொல்கிற சொல்லால் வருகிறது. அதனால் தன்னுடைய சொல்லில் தவறு நேராமல் காத்துக்கொள்ள வேண்டும் என்பதை,

**"ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்**
**காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு" - (642)**

என்ற குறளில் குறிப்பிடுகின்றார். தன் பேச்சு எதிரே உள்ளவரை வயப்படுத்துமாறும், கேட்காதவரும் விரும்பிக் கேட்குமாறும் சொல்லவேண்டும் என்கிறார் வள்ளுவர்.

**"கேட்டார் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல்" (643)**

என்ற குறள் மூலம் கற்றுக்கொடுக்கிறார். சூழ்நிலைகளைக் கூர்ந்து கவனித்துச் சொற்களை அச்சூழலுக்கு ஏற்பப் பேசவேண்டும். ஒருவன் வெற்றி பெறுவதற்கும்,செல்வம் ஈட்டுவதற்கும் சொல்வன்மையைவிட அவசியமானது வேறு எதுவும் இல்லை.

**"திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்**
**பொருளும் அதனினூஉங் கில்" (644)**

என்றும், பேசும் சொல்லை வெல்லும்படி வேறு எந்தச்சொல்லும் இல்லாதிருத்தல் வேண்டும்.

அப்படிப்பட்ட சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பேச வேண்டும் என்கிறார்.

**"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை**
**வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து" (645)**

என்ற குறள் மூலமும் இக்கருத்தை விளக்ககிறார். பிறர் விரும்பும்படிப் பேசுவதும், பிறர் பேசும்போது அச்சொல்லை ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளுதலும் ஒரு தலைவனது சிறந்த பண்பாகும்.

**"வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்**
**மாட்சியின் மாசற்றார் கோள்" - (646)**

என்று குறிப்பிடுகிறார் வள்ளுவர். கருத்துக்களைக் கோர்வையாகக் கோர்த்து இனிமையாகப் பேசுபவரின் பேச்சை உலகம் கேட்டு விரைந்து அதன்படி நடக்கும் என்பதை,

**"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது**
**சொல்லுதல் வல்லார் பெறின்" (648)**

என்று எடுத்துக் கூறியுள்ளார்.

**8. உடல்மொழி** - ஒரு தலைவனுக்கு இருக்கவேண்டிய முக்கியமான பண்புகளில் குறிப்பறிதலும் ஒன்று. ஒருவர் பேசும்போது அவரின் பேச்சோடு, அங்க அசைவுகள், பார்வை, முகத்தின் மாறுதல்கள் முதலியவற்றைக் குறிப்பால் உணரத்தெரிந்து கொள்ள வேண்டும். அத்தகைய குறிப்பறியும் திறன் உள்ளவர்களை எப்பாடுபட்டாவது அருகில் வைத்துக்கொள்ள வேண்டும் என்கிறார்.

**"குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்**
**யாது கொடுத்தும் கொளல்" - (703)**

என்ற குறிப்பறிதல் அதிகாரத்தில் வள்ளுவர் குறிப்பிடுகிறார். கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப்பாவை போல ஒருவரின் உணர்ச்சியை அப்படியே பிரதிபலிப்பது முகம். குறிப்பறிதல் அதிகாரத்தில் அதற்கான குறட்பாக்கள் முகத்தின் வேறுபாட்டினையும் எடுத்துச் சொல்லுகின்றன.

**"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்**
**கடுத்தது காட்டும் முகம்" (706)** என்ற குறளும்,
**"முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்**
**வகைமை உணர்வார்ப் பெறின்" (707)** என்ற குறளும்,
**"பகைமையுங் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்**
**வகைமை உணர்வார்ப் பெறின்" (709)**

போன்ற குறட்பாக்கள் அகத்தின் அழகு முகத்தில் தெரிவதைக் காட்டிக் கொடுத்துவிடும் என்பதை உணர்த்துகின்றன.

**9. அவையறிதல்:** கூட்டத்தின் தன்மையறிந்து பொருத்தமாகப் பேசுவது தலைமைப் பண்புகளை உயர்த்தும். எதிரில் இருப்பவரைக் கூர்ந்து கவனித்து, அவரின் தன்மை அறிந்து சிந்தித்துப் பேசவேண்டும்.

**"அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்**
**தொகையறிந்த தூய்மை யவர்" (711) என்றும்,**
**"ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்**
**வான்சுதை வண்ணம் கொளல்" (714)**

என்ற குறட்பாவில் அறிவாளிகளின் சபையில் அறிவுப்பூர்வமாகப் பேசவும், மற்ற இடங்களில் அறியாதவர் போலும் இருக்க வேண்டும் என்கிறார். அறிவு மிகுந்தசபையில் முந்திச் சென்று பேசாத அடக்கம் ஒருவனுக்கு நன்மையைக் கொடுக்கும் என்பதை,

**"நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்**
**முந்து கிளவாச் செறிவு" (715)**

என்ற குறளிலும், நன்கு கற்றறிந்தவரின் அறிவு, குற்றமற்ற சொற்களை ஆராய்வதில் வல்ல

அறிஞர்களின் சபையில் நன்றாக விளங்கித் தோன்றும் என்பதனை,

**"கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்**
**சொல்தெரிதல் வல்லார் அகத்து" (717)** என்ற குறள் மூலமும்,
**"அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தம்கணத்தர்**
**அல்லார்முன் கோட்டிக் கொளல்" (720)**

என்ற குறள் மூலமும் அவையறிந்து பேச வேண்டும் என்பதை விளக்குகின்றார். விரோதியாகப் பார்க்கும் கூட்டத்தின் முன்பு பேசுவது தூய்மையற்ற முற்றத்தில் சிந்திய அமுதம் போன்றது என்று குறிப்பிடுகின்றார்.

**10. தோல்வியை எதிர்கொள்ளும் திறன்:** ஒரு குழுவில் எல்லோருடைய ஒத்துழைப்பும், மகிழ்ச்சியும் உள்ள காலங்களில் தலைவனுக்கு வழி நடத்துவது எளிது. ஆனால் துன்பங்கள் சூழ்ந்த காலங்களில் வழிநடத்துவது மிகக் கடினம். இவற்றை எதிர்கொண்டு பணி செய்ய தைரியமும், தன்னம்பிக்கையும், புத்திசாலித்தனமும் தேவை. அவ்வாறு துன்பம் வந்த காலத்தில் கலங்காமல் நகைப்போடு அதனை எதிர்கொள்ள வேண்டும். அந்தத் துன்பத்தை எதிர் கொண்டு வெல்வது போன்றது வேறு எதுவும் இல்லை என்பதை, அழியாமை அதிகாரத்தில்,

**"இடுக்கண் வருங்கால் நகுக அதனை**
**அடுத்தூர்வது அஃதொப்பது இல்" (621)**

என்று துன்பத்தை இன்பமாக எதிர்கொள்ள வேண்டும். துன்பம் வந்த காலத்தே கலங்காமல், வண்டியை இழுத்துச் செல்லும்எருது போல விடாமுயற்சியுடன் இருப்பவனுக்குத் துன்பம் இல்லாமல் போய்விடும். இத்தன்மைத்தவர் எத்தகைய துன்பம் வந்தாலும் சமாளிப்பர் என்பதை,

**"மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற**
**இடுக்கண் இடர்பாடு உடைத்து" (624)**

என்ற குறள் மூலம் இன்பம் உண்டாகும்போது அதை விரும்பிப் போற்றாமலும், துன்பம் வந்தவிடத்து அதை இயற்கையானது என்று தெளிந்தும் இருப்பவன் எந்தக் காலத்தும் துன்பத்திற்கு உள்ளாக மாட்டான் என்கிறார் வள்ளுவர்.

**11. சோம்பலை அகற்றுதல்:** ஒரு தலைவன் சோம்பலோடு இருந்தால் எவ்வாறு அழிவான் என்பதற்கு வள்ளுவர் மடியின்மை அதிகாரம்கொண்டு விளக்குகின்றார்.

**"குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்**
**மாசூர மாய்ந்து கெடும்" (601)**
**"நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்**
**கெடுநீ காமக் கலன்" (605)**
**"குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்**
**முடியாண்மை மாற்றக் கெடும்" (609)**

போன்ற குறட்பாக்கள் மூலம் சோம்பல் இருந்தால் அது அரச வம்சமானாலும் விட்டுவைக்காது அழித்துவிடும் என்கிறார் வள்ளுவர்

## முடிவுரை

முடிவுகளை எடுத்து ஒரு வேலையை முடிப்பதுதான் துணிவு. முடிவை எடுப்பது, முடிவு எடுத்தவுடன் அதைச் சார்ந்து உறுதியாக நிற்பது போன்ற திறமைகளை வளர்க்காதவர்கள் சரியான தலைவனாக ஆக முடியாது. தீர்க்கமான சிந்தனை, அதற்கான இறுதிவடிவம், ஒத்துப்போகுதல், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை. தளர்வில்லாமல் இருத்தல் போன்ற பண்புகளோடு இருந்தால் அதற்கான அங்கீகாரங்களைச் சமூகம் கொடுக்கும்.